**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.51/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. சாம்ராஜ் |
| Husband/Father Name | ராஜகுமார் |
| Village /Area | சங்கரன் கோயில் |
| Taluk | சங்கரன் கோயில் |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 36 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.10.2025.

**(எதிரிகள் ஆஜர். ).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் திசையன் விளை வட்டம், திசையன் விளை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18.07.2020-ல் மேல்ப்பாக்கத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது பிற்பகல் 03.45 மணியளவில் எனக்கு மேல்ப்பாக்கத்தில் கடை வைத்துள்ள சின்னத்துரை என்பவர் எனக்கு போன் செய்து மேல்ப்பாக்கம் சர்வே எண்.104, வெங்கடேசன் மற்றும் ரமேஷ் வகைராவிற்கு சொந்தமான தரை கிணற்றில் ஒரு பிணம் மிதந்து கொண்டிருப்பதாக எனக்கு தகவல் தெரிவித்தார். பிறகு நானும் கிராம உதவியாளர் அமுதா என்பவரும் மாலை 04.15 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம். அந்த கிணறு சுமார் 25 அடி அகலமும், 25 அடி ஆழமும் உள்ள அந்த கிணற்றில் தண்ணிர் சுமார் 15 அடியில் மஞ்சள் கலர் பெட்சீட்டால் போர்த்தி கட்டடப்பட்ட பிணம் மிதந்து கொண்டிருந்தது. பிறகு காவல் துறைக்கும், தீயணைப்பு துறைக்கும் தகவல் கொடுத்தோம்.

தீயணைப்பு துறையினர் சம்பவ இடம் வந்து அந்த பிணத்தை வெளியில் எடுத்து பிரித்தார்கள். முகம் சரியாக தெரியவில்லை ஆணின் சடலம் என தெரியவந்தது. இறந்தவரின் உடலில் சாம்பல் நிற சட்டை அணிந்திருந்தார். மெரூன் கலர் ஜட்டி அணிந்திருந்தார். தலை, இடுப்பு மற்றும் கையிலும் வெட்டு காயங்கள் இருந்தன. பிறகு நான் அரக்கோணம் நகர காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையத தான் அது **அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்கள் யாரோ அடித்து கொலை செய்ததாக தெரியவந்தது. இறந்தவரின் இடது கையில் ஆள்காட்டி விரலுக்கும் மணிகட்டிற்கும் இடையில் இலை போன்ற ஒரு டாட்டூ இருந்தது. இறந்தவர்அணிந்திருந்த ஜட்டியில் ஜாக்கிங் என்று எழுதப்பட்டிருந்தது. இறந்தவரின் சட்டை பாக்கெட்டில் கார்போலின் என்று எழுதப்பட்டிருந்தது. அவர் அணிந்திருந்த சட்டையில் காலரில் Seven Little Star Tailor என்ற Mark இருந்தது. இது சம்பந்தமாக அரக்கோணம் நகர காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். சாட்சி வழக்கு சொத்துக்களை அடையாளம் காண்பிக்க வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.07 16:56:11 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.